[2003 ஏப்ரல் 7

*முற்பகல் 11-05*

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2003 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூற்று இரண்டாவது முதல் தொண்ணூற்று எட்டாவது வரையிலான ஏழு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 6. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 34—பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 20—நெடுஞ்சாலைகள் துறை**

**(இ) கோரிக்கை எண் 23—உள் துறை-சிறைச்சாலைகள்**

**(ஈ) கோரிக்கை எண் 36—மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை**

**(உ) கோரிக்கை எண் 38—பொதுப் பணித் துறை**

### (அ) கோரிக்கை எண் 34—பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 34-பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை மானியக் கோரிக்கை எண் 34-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.22,35,85,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.